தேதி.11.11.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.28/2022 திருமதி.ரூபா, த/பெ.ராமசந்திர கடடி வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் எத்தனை வருடங்கள் இந்த வங்கிகிளையில் பணியாற்றி வருகிறேன் என்றால் கடந்த ஆறு மாதங்களாக கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். பிரதிவாதி என்ன வகை வங்கி கடனை பெற்றுள்ளார் என்றால் MSME Loan பெற்றுள்ளார். நான் பிரதிவாதிக்கு வங்கி கடனை கொடுத்தேனா அல்லது கிளை மேலாளர் கொடுத்தாரா என்றால் எனக்கு முன்னால் இருந்த கிளை மேலாளர் கொடுத்துள்ளார். மேற்படி கடன் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 2017ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. பிரதிவாதி தனக்கு கடன் வேண்டுமென்று எப்போது விண்ணப்பம் அளித்தார் என்றால் 10.05.2017ம் தேதியில் கொடுத்துள்ளார். எவ்வளவு தொகை எவ்வளவு வட்டி வீதத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் ரூ.4,60,000/-ம் 10.40%த்திற்கு கொடுக்கப்பட்டது. விண்ணப்பத்தை பெற்றதற்கான ஒப்புகை கடிதம் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 01.04.2020ல் கொடுக்கப்பட்டது. மேற்படி ஒப்புகை கடிதமானது வா.சா.ஆ.5ல் கிளை மேலாளர் கையொப்பமோ அல்லது வங்கி முத்திரையோ இல்லை என்றால் அது தேவையில்லை அதனால் இடப்படவில்லை. மேற்படி வா.சா.ஆ.5ல் யார் கையெழுத்து செய்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ.5ல் சாட்சியின் முகவரியோ மற்ற விவரங்களோ சரிவர பூர்த்தி செய்யாமல்

உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5ல் சாட்சி யார் முன்னிலையில் கையொப்பம் செய்தார்கள் என்றால் வங்கி ஊழியர்கள் முன்னிலையில் கையெழுத்து செய்தார்கள். மேற்படி கடன் தொகையானது மாதமோ கால் ஆண்டோ, அல்லது வருடத்திற்கு ஒரு முறை என்ற எவ்வகையில் செலுத்தவேண்டும் என்றால் நாங்கள் 60 மாதங்கள் கொடுத்துள்ளோம் மாத தவணையில் செலுத்தவேண்டும். மேற்படி மாதத்தவணை எவ்வளவு என்றால் வட்டியுடன் மாதம் ரூ.12,281/—ஆகும். எவ்வளவு வட்டி மற்றும் எவ்வளவு அசல் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் இல்லை. பிரதிவாதி எவ்வளவு தொகை இது வரை செலுத்தியுள்ளார் என்றால் ரூ.3,63,740/— இது வரை செலுத்தியுள்ளார். பின்னர் பிரதிவாதி 24.06.2025ம் தேதியில் ரூ.50,000/—மும், 03.02.2025ம் தேதியில் ரூ.50,000/—மும் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை பிரதிவாதி ரூ.3,63,740/— செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது தான் பிரதிவாதி இரு தவணைகளில் தலா ரூ.50,000/—ம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.2ஆன Term loan sanction memorandum ஆவணத்தில் மாதத்தவணை ரூ.12,281/— என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் 2வது பத்தியில் பிரதிவாதி கடன் தொகையை 60 மாத தவணையாக ஒவ்வொரு மாதமும் ரூ.12,281/— வட்டியும் செலுத்த வேண்டும் என்றும் மேற்படி கடன் தொகையையும் அதற்குண்டான வட்டியையும் சேர்த்து ஒவ்வொரு வருடமும் திரும்ப செலுத்தி கடனை புதுப்பித்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான். வா.சா.ஆ.3ஆன கொதுவை ஒப்பந்தத்தில் ரூ.11,158/− தவணைத்தொகையாக 60 மாதங்களுக்கு செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் MSME Loanகளில் வட்டித்தொகை மாறும். வட்டித்தொகை சரியாக கணக்கீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி கடன் குறித்து 01.04.2020ம் தேதியில் கடன் மற்றும் பாதுகாப்புக்கான ஒப்புகை உயிர்ப்பு கடிதம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். 01.04.2020ம் தேதி National lockdown ஆக இருந்தது என்றால் சரிதான். மேற்படி தேதியில் பிரதிவாதி வங்கிக்கு வந்தாரா என்றால் என்னால் சொல்ல இயலாது. மேற்படி உயிர்ப்பு கடிதத்தில் பிரதிவாதியின் கையெழுத்தானது வங்கியில் பெறப்பட்டதா அல்லது பிரதிவாதியின் வீட்டில் பெறப்பட்டதா என்றால் வங்கியில் தான் பெறப்பட்டது. வருகைப்பதிவேடு எனது வங்கியில் பராமரிக்கிறோமா என்றால் பராமரிக்கிறோம். மேற்படி வருகை பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வங்கியின் ஊழியர்களின் Movement Register பராமரிக்கப்படுகிறதா என்றால் பராமரிக்கப்படுகிறது. ஆனால் மேலாளருக்கு மட்டும் கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் 4வது பத்தியில் வங்கி கடனை திருப்பி செலுத்தக்கோரி பிரதிவாதியை யார் நேரில் அணுகினார்கள் என்றால் கிளை மேலாளர் அணுகினார். 17.07.2018ம் தேதியில் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அந்த அறிவிப்பில் ரூ.4,45,524.70/− தொகை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் கடன் தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் எந்த இயந்திரங்கள் வாங்க கடன்கொடுக்கப்பட்டதோ அந்த இயந்திரங்கள்

கைப்பற்றப்பட்டு ஏலத்திற்கு விடப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என்றால் நாங்கள் அவருடைய நிறுவனத்திற்கு சென்றபோது அங்கு அவரும் இல்லை. இயந்திரங்களும் காணப்படவில்லை. மேற்படி பிரதிவாதியின் நிறுவனத்திற்கு யார் சென்று பார்வையிட்டார்கள் என்றால் எனக்கு முன்னால் இருந்த மேலாளர் பார்வையிட்டார். கொதுவை ஒப்பந்தத்தின் வரிசை எண்.13ல் இந்த கடனுக்காக மேற்படி இயந்திரங்களையும் சேர்த்து தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் புகார் ஏதும் கொடுக்கப்படவில்லை வழக்கறிஞர் அறிவிப்பு தான் அனுப்பப்படும். கொதுவை ஒப்பந்தத்தின் வரிசை எண்.20ல் மேற்படி கடன் பெற்றவர் கடன் முடியும் வரை இயந்திரங்களை தன் நிறுவனத்தில் இருந்து இடமாற்றமோ விற்பனையோ செய்யக்கூடாது என்று விதி உள்ளது என்றால் சரிதான். மேற்படி இயந்திரங்கள் நல்லமுறையில் உள்ளது என்பதற்கு அறிக்கை பெறப்படுவது கட்டாயமா என்றால் தவணை கடனுக்கு கட்டாயம். கடன் தொகையை பிரதிவாதி செலுத்தாததால் மேற்படி இயந்திரங்களை கடன்தொகையை ஈடு செய்ய கைப்பற்ற ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் கடன் கொடுக்கும்போது இயந்திரங்கள் இருந்தன. ஆனால் பிரதிவாதி கடன் தொகையை செலுத்தாதால் அங்கு சென்று பார்த்தபோது இயந்திரங்கள் இல்லை. மேற்படி கடன் தொகையை வசூலிக்க கிளை மேலாளர் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றால் முறையாக சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளோம், வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதி

ரூ.3,60,000/–ம் கொடுக்க தயாரா இருக்கிறார் என்றால் பிரதிவாதி தயாராக இருந்தால் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.